بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுமுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 20/06/2025 அன்று U.K - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

**போர்களில் சிறந்த இராணுவ நுட்பம் அறிந்து செயலபடுதல் தொடர்பாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாற்றின் அம்சங்கள் மற்றும் ஈரான் – இஸ்ரேல் மோதலைக் கருத்தில் கொண்டு துஆக்கள் செய்வதற்கான வலியுறுத்தல்**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔

بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ۝۱ اَلۡحَمۡدُ لِلّٰہِ رَبِّ الۡعٰلَمِیۡنَ ۝۲ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ۝۳ مٰلِکِ یَوۡمِ الدِّیۡنِ ۝۴

اِیَّاکَ نَعۡبُدُ وَ اِیَّاکَ نَسۡتَعِیۡنُ ۝۵ اِہۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِیۡمَ ۝۶ صِرَاطَ الَّذِیۡنَ اَنۡعَمۡتَ عَلَیۡہِمۡ ۬ۙ غَیۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَیۡہِمۡ وَ لَا الضَّآلِّیۡنَ ۝۷

மக்கா வெற்றி பற்றி எடுத்துரைக்கப்பட்டு வந்தது. அதற்காக புறப்படுவதற்கு முன்பு நடந்த இந்தவொரு நிகழ்வு பற்றிய குறிப்பு கிடைக்கிறது: **ஒரு சஹாபி தமது அறியாமையினால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் இந்தப் பயணத்தைப் பற்றி மக்கத்தினருக்குத் தகவல் கொடுக்க முயற்சி செய்தார்.** ஆனால், அல்லாஹ் ஹுஸூர் (ஸல்) அவர்களுக்கு அதைப் பற்றித் தெரியப்படுத்தி விட்டான். இவ்வாறு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் இந்த திட்டம் தொடர்பாக நிராகரிப்பாளர்களுக்குத் தகவல் போய் சேர முடியவில்லை.

மதீனாவில் மக்காவுக்கு செல்வதற்கான ஆயத்தங்கள் துவங்கியபோது, காட்டரபியான ஒரு சஹாபி ஹாத்திபின் அபீபல்தா என்பவர் குறைஷியர்களுக்கு ஒரு கடிதத்தை எழுதி அதில், 'ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் உங்களை நோக்கி புறப்படத் திட்டமிட்டுள்ளார்கள்' எனத் தகவல் கொடுக்க முயற்சி செய்தார். அவர் இந்தக் கடிதத்தை ஒரு பெண்ணிடம் கொடுத்து, இதை இரகசியமாக மக்கத்தினருக்குக் கொண்டு போய் சேர்க்குமாறு கூறினார். அந்தப் பெண் கடிதத்தைத் தனது தலைமுடியில், கொண்டையில் வைத்துக் கொண்டாள். பொதுவான பாதையை விட்டு விலகி மக்காவை நோக்கி புறப்பட்டாள்.

அல்லாஹ் இந்தக் கடிதம் தொடர்பாகப் பெருமானார் (ஸல்) அவர்களுக்குத் தெரியப்படுத்தி விட்டான். பெருமானார் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களை அழைத்தார்கள். இந்தக் கடிதத்தைக் கொண்டு வருவதற்காக இன்னொரு சஹாபியுடன் அவர்களை அனுப்பி வைத்தார்கள். சஹாபா பெருமக்கள் அந்தப் பெண்ணைப் பிடித்து விட்டார்கள். அவளிடம் கடிதத்தைக் கேட்டார்கள். துவக்கத்தில் அந்தப் பெண் மறுத்தாள். எனினும், கண்டிப்புடன் கேட்டதனால் கடிதத்தை எடுத்துக்

கொடுத்து விட்டாள். ஹஸ்ரத் அலீ (ரலி) முதலியோர் அந்தப் பெண்ணை அழைத்துக் கொண்டு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் அவைக்கு வந்தார்கள். ஹஸ்ரத் ஹாத்திப் பின் அபீபல்தா, 'நான் நம்பிக்கை துரோகி அல்ல. என்னுடைய சொத்துக்களும், என் மனைவி மக்களும் பாதுகாப்பாக இருக்கும் பொருட்டு, மக்கத்தினருக்கு ஏதும் பெரிய நன்மை செய்யலாம் என நான் நினைத்தேன்' என்று கூறினார்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், **'இவர் உண்மையைக் கூறியுள்ளார். நீங்களும் இவரைப் பற்றி நல்ல விஷயம் தவிர வேறு எதுவும் சொல்லாதீர்கள்'** என்று கூறினார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடம், 'இவர் பத்ர் யுத்தத்தில் கலந்து கொள்ளவில்லையா?' எனக் கேட்டார்கள். இதைக் கேட்டதும் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் கண்களிலிருந்து கண்ணீர் வந்து விட்டது. அவர்கள், 'அல்லாஹ்வும் அவனுடைய தூதரும் நன்கறிவார்கள்' என்று கூறினார்கள்.

இதற்குப் பிறகு, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பயணத்தைத் தொடங்கினார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் முஹாஜிர்கள், அன்ஸாரிகள் மற்றும் அரேபியாவின் மற்ற மக்களுடன் புறப்பட்டார்கள். அப்பொழுது ரமலானின் 10 நோன்புகள் கழிந்திருந்தன. முஸ்னத் அஹ்மத் உடைய அறிவிப்புப்படி, ஹுஸூர் (ஸல்) அவர்கள் ரமலான் 2 அன்று மதீனாவில் இருந்து புறப்பட்டார்கள். புகாரீயின் விரிவுரையாளரான அல்லாமா இப்னு ஹஜர் அவர்களும் ரமலான் 2 எனும் அறிவிப்புக்கு முன்னுரிமை அளித்துள்ளார்கள்.

மதீனாவில் இருந்து புறப்படும்போது, இந்தப் பயணத்தில் ஏறத்தாழ 7400 வீரர்கள் கலந்து கொண்டிருந்தார்கள். வழியில் இந்த எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே சென்றது. சில நூல்களில் இந்தப் படையின் எண்ணிக்கை 12,000 என்றும் கூறப்பட்டுள்ளது. ஆனால், **அதிகப்படியான நூல்களில் இந்த எண்ணிக்கை 10,000 என்று கூறப்பட்டுள்ளது. மேலும், இதுவே அதிகம் சரியானதாகத் தெரிகிறது.**

இந்தப் பயணத்தில் ஹுஸூர் (ஸல்) அவர்களின் தூய துணைவியார்களில் ஹஸ்ரத் உம்மு சலமா (ரலி) அவர்கள் உடன் இருந்தார்கள். சில அறிவிப்புகளுக்கு ஏற்ப ஹஸ்ரத் மைமூனா (ரலி) அவர்களும் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுடன் இருந்தார்கள். பெருமானார் (ஸல்) அவர்களின் புதல்வியார் ஹஸ்ரத் ஃபாத்திமா (ரலி) அவர்களும் பெருமானார் (ஸல்) அவர்களுடன் இருந்ததாக சில அறிவிப்புகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தப் பயணம் ரமலான் மாதம் நடைபெற்றது. பயணத்தின் தொடக்கத்தின் சில நாள்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் நோன்பு வைத்தார்கள். பிறகு, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள்

நோன்பு வைக்கவில்லை. இன்னும் கூறுவதாயின், ஏனைய சஹாபா பெருமக்களையும் நோன்பு வைக்க வேண்டாம் எனத் தடுத்து விட்டார்கள்.

**இந்தப் பயணத்தின்போது, விலங்குகளுடன் அனுதாபத்துடன் நடந்து கொண்டது தொடர்பாக ஒரு நிகழ்வு கிடைக்கிறது.** அதாவது, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் வழியில் ஒரு பெண் நாயைப் பார்த்தார்கள். அதன் குட்டிகள் அதனிடம் பால் குடித்துக் கொண்டிருந்தன. பெருமானார் (ஸல்) அவர்கள் படையில் இருந்து யாராவது அந்த நாயையோ அல்லது அதன் குட்டிகளையோ தொந்தரவு செய்யாது இருப்பதற்காக, சஹாபி ஒருவருக்கு அந்த நாய்க்கு முன்னால் நின்று கொள்ளுமாறு கட்டளையிட்டார்கள்.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் உளவாளிகளைப் பிடிப்பதற்காக ஒரு சிறு குதிரைப் படையை முன்னால் அனுப்பி வைத்திருந்தார்கள். இந்த படைக்குழு பனூஹவாஸினைச் சேர்ந்த ஓர் உளவாளியைப் பிடித்துக் கொண்டு வந்தது. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அவனிடம் கேட்டபோது அவன், 'ஹவாஸின் கோத்திரத்தினர் தங்களை எதிர்ப்பதற்காக ஒன்று கூடுகிறார்கள்' என்று கூறினான். ஹுஸூர் (ஸல்) அவர்கள், 'அல்லாஹ் நமக்குப் போதுமானவன். மேலும், அவன் மிகச் சிறந்த உதவியாளன் ஆவான்' என்று கூறினார்கள். ஹுஸூர் (ஸல்) அவர்கள் இந்த உளவாளி முன்னால் சென்று மக்களுக்குத் தகவல் கொடுத்து விடாதிருப்பதற்காக இவனைத் தடுத்து வைக்குமாறு ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்களுக்கு ஆணையிட்டார்கள்.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் முஸ்லிம்களைக் கோத்திரங்கள் வாரியாகப் பிரித்து அவர்களைப் படைகளாக ஆக்கினார்கள். ஒவ்வொரு கோத்திரத்தின் படைக்கு அவர்களில் இருந்தே ஒரு தலைவரை நியமித்தார்கள். அன்ஸாரிகளைக் குடும்பங்கள் அடிப்படையில் 12 படைக்குழுக்களாகப் பிரித்தார்கள். 6 படைக்குழுக்கள் அவ்ஸ் கோத்திரத்துக்கும், 6 படைக்குழுக்கள் கஸ்ரஜ் கோத்திரத்துக்கும் நிர்ணயித்தார்கள். முஹாஜிர்களின் 3 பெரிய கொடிகள் ஹஸ்ரத் அலீ பின் அபீ தாலிப் (ரலி) அவர்கள், ஹஸ்ரத் ஸுபைர் பின் அவ்வாம் (ரலி) அவர்கள் மற்றும் ஹஸ்ரத் சஃது பின் அபீ வக்காஸ் (ரலி) அவர்கள் ஆகியோரிடத்தில் இருந்தன.

இந்தப் பயணத்தின் இடையிலேயே, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் தந்தையின் சகோதரரின் மகனும், பால்குடி சகோதரரும் ஆகிய ஹஸ்ரத் அபூ சுஃப்யான் பின் ஹாரிஸ், அவருடைய மகன் ஜாஃபர் மற்றும் அப்துல்லாஹ் பின் அபீ உமய்யா பின் முகைரா ஆகியோர் ஈமான் கொண்டது பற்றிய குறிப்பு கிடைக்கிறது. இவர்கள் இஸ்லாத்தின் கடுமையான எதிரிகளாக இருந்தார்கள். எனவே, பெருமானார் (ஸல்) அவர்களுக்கு முன்னால் வருவதற்கு அஞ்சினார்கள்.

உம்முல் முஃமினீன் ஹஸ்ரத் உம்மு சலமா (ரலி) அவர்கள் அப்துல்லாஹ் பின் உமய்யாவின் சகோதரி ஆவார்கள். அவர்கள் நபி பெருமானார் (ஸல்) அவர்களிடம், 'தங்களின் சச்சாவின் மகன் அபூ சுஃப்யானும், மாமியின் மகன் அப்துல்லாஹ்வும் தங்களை சந்திக்க ஆசைப்படுகிறார்கள்' என்று பணிவுடன் கூறினார்கள். அதற்கு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், 'எனக்கு இவர்கள் தேவையில்லை; நான் இவர்களை சந்திக்க விரும்பவில்லை. என் சாச்சா வழி உறவினர்களோ என்னை அவமதித்துள்ளார்கள்' எனக் கூறினார்கள். இவர் கவிஞர் ஆவார். பெருமானார் (ஸல்) அவர்களை இகழ்ந்து பாடி வந்தார். அப்துல்லாஹ்வோ மக்காவில் என்னென்ன கொடுமைகளை எல்லாம் இழைக்கவில்லை!?

இந்த விஷயம் அபூ சுஃப்யான் பின் ஹாரிஸுக்குத் தெரிய வந்ததும், அவர் உணர்ச்சிவசப்பட்டு, 'முஹம்மத் {(ஸல்)} என்னிடம் திருப்தி கொள்ளாமல் இருக்கிறார்; சந்திப்பதற்கு அனுமதி தரவில்லை என்றால், நான் என் மகனை அழைத்துக் கொண்டு பாலைவனங்களை நோக்கி சென்று விடுவேன். எதுவரை என்றால், பசியாலும், தாகத்தாலும் மரணித்து விடுவேன்' என்று கூறினார். இந்த விஷயம் கண்ணியத்திற்குரிய நபி (ஸல்) அவர்களுக்குத் தெரியவந்ததும் ஹுஸூர் (ஸல்) அவர்களின் உள்ளம் உடனடியாக மென்மையாகி விட்டது. பெருமானார் (ஸல்) அவர்கள் இருவரையும் வரவழைத்தார்கள். மேலும், அவர்களுக்குத் தம்மை சந்திக்கும் கண்ணியத்தை வழங்கினார்கள்.

ஹஸ்ரத் அபூ சுஃப்யான் பின் ஹாரிஸ் ஹிஜ்ரீ 15 ஆம் ஆண்டு அல்லது ஹிஜ்ரீ 20 ஆம் ஆண்டு வஃபாத் ஆனார். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் இவருக்கு ஜனாஸா தொழுகை தொழ வைத்தார்கள். ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் அபீ உமய்யா பின் முகைராவின் பெயர் ஹுஸைஃபா ஆகும். இவர் ஹுஸூர் (ஸல்) அவர்களின் மாமி ஆத்திகாவின் மகனாவார். இவர் உம்முல் முஃமினீன் ஹஸ்ரத் உம்மு சலமா (ரலி) அவர்களின் சகோதரரும் ஆவார். இவர் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட பிறகு, பெரும் ஆர்வத்துடன் ஹுனைன் போரில் பங்கு பெற்றார். தாயிஃப் போரில் ஓர் அம்பு பட்டதனால் ஷஹீதானார்.

**இந்தப் போர்த்திட்டத்தில் ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) அவர்கள் இஸ்லாமிய படையில் இணைந்து கொண்டது பற்றி இவ்வாறு எழுதப்பட்டுள்ளது:** ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மதீனாவில் இருந்து மக்காவை நோக்கி பயணத்தைத் துவங்கியபோது, ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) அவர்கள் மதீனாவை நோக்கி ஹிஜ்ரத் செய்வதற்காகப் பயணப் பொருட்களைக் கட்டினார்கள். ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) அவர்கள் ஜுஹ்ஃபாவில் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களை சந்தித்தார்கள். அவர்கள் தம்முடைய பொருட்களை மதீனாவுக்கு அனுப்பி வைத்து விட்டு, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுடன் இணைந்து மக்காவை

நோக்கி புறப்பட்டார்கள். இவர்கள் ஹுஸைர் (ஸல்) அவர்களின் சச்சா ஆவார்கள். வயதில் நபி (ஸல்) அவர்களை விட 3, 4 வயது பெரியவராக இருந்தார்கள். தம் மகன் ஃபஸ்ல் பின் அப்பாஸ் காரணமாக அபுல் ஃபஸ்ல் என்ற குன்னியத் பெயரால் பிரசித்தி பெற்றிருந்தார்கள். ஹஸ்ரத் அபூ தாலிப் அவர்களுக்குப் பிறகு, ஸிகாயா, அதாவது, ஹாஜிகளுக்குத் தண்ணீர் கொடுக்கும் பணி இவர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. இவர்கள் ஹுனைன் போரில் பெருமானார் (ஸல்) அவர்களுடன் உறுதியாக நின்றார்கள். ஹிஜ்ரீ 32 ஆம் ஆண்டு அல்லது ஹிஜ்ரீ 33 ஆம் ஆண்டு இவர்கள் வஃபாத் ஆனார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சிறந்த இராணுவ நுட்பமறிந்த செயல் மற்றும் துஆக்கள் ஆகியவற்றின் விளைவால் எவ்வளவு பெரிய அற்புதம் வெளிப்படுகிறது! **மதீனாவிலிருந்து புறப்பட்டு வந்த 10,000 பேர் கொண்ட இந்தப் படை ஏறத்தாழ 400 கி.மீ பயணத்தைக் கடந்து மக்காவிலிருந்து சரியாக 5 மைல் தொலைவில் முகாம் அமைத்து விட்டது; ஆனால், இன்னும் மக்கத்தினருக்கு செய்தி சென்றடையவில்லை!**

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இஷா நேரத்தில் மக்காவில் இருந்து 5 மைல் தொலைவில் மராஉஸ் ஸஹ்ரானில் முகாம் அமைத்தார்கள். சஹாபா பெருமக்களுக்குக் கட்டளையிட்டதும் அவர்கள் 10,000 நெருப்புகளை மூட்டினார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களைப் படையைக் கண்காணிக்க நியமித்தார்கள்.

**ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:** அகழ்ப்போரின் வரலாறு தவிர்த்து, இவ்வளவு பெரிய படை அரேபியாவின் வரலாற்றில் தயாரானதில்லை. அகழ்ப் போரில் 10, 12 ஆயிரம் பேர் இருந்தார்கள். ஆக, அரேபியாவின் வரலாற்றில் அவ்வளவு பெரிய படைக்கான இரண்டாவது உதாரணமாக இது இருந்தது. ஆனால், மதீனாவிலிருந்து இவ்வளவு பெரிய படை புறப்படுகிறது; எவருக்கும் அதைப் பற்றித் தெரியக்கூட இல்லை!

பிறகு அல்லாஹ் அற்புதமான முறையில் நான் எனது முரசறையும் இடத்தில் முரசொலிக்கின்றேன். அவர்களின் முரசறையும் இடத்தை உடைக்கின்றேன் என்பதைக் காட்டுகிறான். எனவே, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் புறப்பட்டபோது அன்னார், ‘என் இறைவா! நான் உன்னிடம் துஆ செய்கிறேன்! நீ மக்கத்தினரின் காதுகளை செவிடாக்கி விடுவாயாக! அவர்களுடைய உளவாளிகளைக் குருடர்கள் ஆக்கி விடுவாயாக! அவர்கள் எங்களைப் பார்க்காதிருக்கட்டும்! அவர்களுடைய காதுகள் வரை எங்களுடைய எந்த விஷயமும் சென்றடையாதிருக்கட்டும்!’ என்று கூறினார்கள்.

மதீனாவில் நூற்றுக்கணக்கான நயவஞ்சகர்கள் இருந்தார்கள். ஆனால், 10,000 பேர் கொண்ட படை மதீனாவிலிருந்து புறப்படுகிறது. ஆனால், மக்கத்தினருக்கு எந்த செய்தியும் சென்றடையவில்லை. நபி பெருமானார் (ஸல்) அவர்கள் அவர்கள்மீது தாக்குதல் தொடுக்க வாய்ப்பு உள்ளது என்று மக்கத்தினர் கண்டிப்பாக கவலைபட்டார்கள்தான்; ஆனால், பெருமானார் (ஸல்) அவர்கள் இவ்வளவு பெரிய படையை அழைத்துக் கொண்டு அவர்களுக்கு அருகில் வந்து சேர்ந்து விட்டார்கள் என்பதை அவர்கள் அனுமானித்துக்கூட இருக்கவில்லை.

மக்கத்தினர் ஆபத்துகளைக் கருத்தில் கொண்டு இரவுகளில் அக்கம்பக்கம் சுற்றி வந்தார்கள். இப்படியே ஓர் இரவு அபூ சுஃப்யான் ஹக்கீம் பின் ஹிஸ்ஸாம் மற்றும் இன்னொரு தலைவர் என தம் இரு கூட்டாளிகளுடன் வலம் வந்து கொண்டிருந்தார். அப்பொழுது அவர்கள் இவ்வளவு பெரிய எண்ணிக்கையில் நெருப்புகள் மூட்டப்பட்டிருப்பதைப் பார்த்ததும் ஊகிக்கத் தொடங்கினார்கள். அந்த நெருப்புகள் அபூ சுஃப்யானையும், அவருடைய கூட்டாளிகளையும் அச்சத்திக்குள்ளாக்கி விட்டன. அவர்கள் இந்த விஷயங்களைப் பேசிக் கொண்டுதான் இருந்தார்கள்; அதற்குள், நபி (ஸல்) அவர்களின் உளவாளிகள் இவர்களைப் பிடித்துக் கொண்டார்கள். மேலும், நபி பெருமானார் (ஸல்) அவர்களுக்கு முன்னால் நிறுத்துவதற்காக அழைத்துச் சென்றார்கள்.

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் கூறினார்கள்:* இதன் விளக்கம் மிகவும் நீளமானது. அது இனி எடுத்துரைக்கப்படும். இன் ஷா அல்லாஹ்.

*குத்பாவின் இறுதியில் ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் துஆக்களின் பக்கம் கவனமூட்டியவாறு கூறினார்கள்:* நான் எப்பொழுதும் கூறுவது போன்று, துஆக்களின் பக்கம் கவனம் செலுத்தி வாருங்கள். அல்லாஹ் உலகைக் குழப்பங்களிலிருந்து பாதுகாப்பானாக! இப்பொழுது மேலும் கீழுமாக மாறிக் கொண்டிருக்கும் நிலைமையை அல்லாஹ் சீராக்குவானாக! இது நன்மையின் பக்கம் செல்லட்டுமாக! மேலும் அழிவை நோக்கி செல்லாதிருக்கட்டுமாக!

اَلْحَمْدُ لِلّٰهِ! اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا

مَنْ يَّهْدِهِ اللّٰهُ فَلَا مُضِلَّ لَهٗ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِیَ لَهٗ وَنَشْهَدُ أَنْ لَّآ اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ اللّٰهِ رَحِمَكُمُ

اللّٰهُ اِنَّ اللّٰهَ يَأْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِی الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ

يَذْكُرْكُمْ وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

**(தமிழாக்கம்: மவ்லவி அத்தாவுல் முஃக்னீ)**